## லெந்து கால ஆராதனை ஒழுங்குகள்

| நாள் | நேரம் | தலைப்பு | வேத பாடங்கள் | செய்தியளிப்பவர் |
|---|---|---|---|---|
| 01-03-2016 புதன் | காலை 5.30 மணி | வாக்குத்தத்த ஆராதனை (திருவிருந்து) | | அருள்திரு. E.W. கிறிஸ்டோபர் |
| 01-03-2017 புதன் | மாலை 7.00மணி | சாம்பல் புதன் (திருவிருந்து ஆராதனை)<br>சிலுவை: மனந்திரும்புதலுக்கான ஓர் அழைப்பு | ஏசாயா 1:16-20<br>மாற்கு 1:12-15 | திரு.A. ஜோசப் லேலீடர் |
| 03-03-2017 வெள்ளி | மாலை 7.00மணி | இயேசுவை வாழவிடுவோம் வாருங்கள் லெந்து வெள்ளி – I<br>**பொருளாதாரம் சார்ந்த காரணங்கள்** | மாற்கு 11:15 – 18 | திரு.பால் பன்னீர் செல்வம் |
| 05-03-2017 ஞாயிறு | காலை 8.30மணி | சுத்திகரிக்கும் கிறிஸ்து<br>திருவிருந்து ஆராதனை | சகரியா 13: 1 – 9<br>மாற்கு 1:40 – 45 | அருள்திரு. டேனியேல் செல்லதுரை - ஆயர் |
| 10-03-2017 வெள்ளி | மாலை 7.00மணி | இயேசுவை வாழவிடுவோம் வாருங்கள் வெள்ளி – II<br>**அரசியல், அதிகாரம், ஆற்றல், சார்ந்த காரணங்கள்** | யோவான் 11:43 – 53 | திரு. கிளாட்வின் பிரபாகரன்<br>செயலர் / பயிற்சி அருளுரைநர் |
| 12-03-2017 ஞாயிறு | காலை 8.30மணி | **மன்னிக்கும் கிறிஸ்து** | ஆதியாகமம் 4: 4 – 16<br>மாற்கு 2: 1 – 12 | திரு.பால் பன்னீர் செல்வம் |
| 17-03-2017 வெள்ளி | மாலை 7.00மணி | இயேசுவை வாழவிடுவோம் வாருங்கள் வெள்ளி – III<br>**சமூகம் மற்றும் கருத்தியல் சார்ந்த காரணங்கள்** | மத்தேயு 22:25 – 46 | திரு. ரிச்சர்ட் தாமஸ்<br>பொருளர் / பயிற்சி அருளுரைஞர் |
| 19-03-2017 ஞாயிறு | காலை 8.30மணி | **கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளுதல்** | ஓசியா 2:14 – 23<br>மத் 15: 21 – 28 | அருள்திரு. டேனியேல் செல்லதுரை - ஆயர் |
| 24-03-2017 வெள்ளி | மாலை 7.00மணி | இயேசுவை வாழவிடுவோம் வாருங்கள் வெள்ளி – IV<br>**சுற்றுச்சூழல் மற்றும் உளவியல் சார்ந்த காரணிகள்** | யோவான் 7:45 – 53 | திருமதி. மெரோலின் ஆல்பர்ட் |
| 26-03-2017 ஞாயிறு | காலை 8.30மணி | **விடுவிக்கும் கிறிஸ்து** | விடுதலைபயணம் 3:1 – 13<br>லூக்கா 13: 10 – 17 | திரு.A. ஜோசப் லேலீடர் |
| 31-03-2017 வெள்ளி | மாலை 7.00மணி | இயேசுவை வாழவிடுவோம் வாருங்கள் வெள்ளி – V<br>**பாலினம் சார்ந்த காரணங்கள்** | மத்தேயு 27:16 – 21 | திரு. ஸ்வீட்டிலின் ரிச்சர்ட் |

மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு
நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்... ஏசாயா 53: 4

# C.S.I இயேசுவில் புதுவாழ்வு ஆலயம்

55,3வது லே அவுட், டீச்சர்ஸ் காலனி, லட்சுமிபுரம், சென்னை - 600099

## ஆயர் மடல்

இறை இயேசுவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன் நாம் புதியதொரு காலத்தில் நுழைய இருக்கிறோம். அதுதான் லெந்து. லெந்து காலம் என்பது என்ன? என்ற கேள்வியோடு உங்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அது ஒரு பூரணமான காலம் அதாவது யோவான் – 3 : 16, மற்றும் மாற்கு 10:45 ன் அடிப்படையில் கடவுள் தன்னுடைய இருப்பு நிலையை அன்பின் மூலமும், எதிர்கால நம்பிக்கையின் மூலமும் வெளிப்படுத்துகின்றார். இந்த லெந்து காலத்தில் பல் வேறு ஆன்மீக செயல்பாடுகளிலும், சிந்தனையிலும் ஜெபத்திலும் அதிக சிரத்தையோடு ஈடுபடும்படி உங்களை வேண்டி கேட்டுக்கொள்கிறேன், லெந்து கால ஆராதனைகளில் திருச்சபை மக்கள் தவறாமல் நேரத்தோடு பங்கு பெறவும் தங்கள் குடும்பத்திற்கென்று கொடுக்கப்படுகின்ற சுயவெறுப்பு உண்டியல்களை திருப்பணிக்கென்று ஜெபத்துடன் அர்ப்பணிக்க வேண்டுகிறேன். இறைவன் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக உங்கள் அனைவருக்கும் ஈஸ்டர் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆண்டவரின் அருட்பணியில்

**Rev.Daniel Chelladurai**

# தேவ ஐக்கியத்தில் வாழ மூன்று வழிகள்

ஆவிக்குரிய ஆரோக்கியமான வளர்ச்சிக்கு தேவ அரவணைப்பு அல்லது தேவ ஐக்கியத்தில் வாழ்கின்ற அனுபவம் அவசியம். (1 கொரி 1:9) தேவ ஐக்கியத்தை உணரவும் அனுபவிக்கவும் 3 வழிகள் உள்ளன. ஒன்று : தேவனோடு விசுவாசத்தின் அடிப்படையில் பேச வேண்டும். இரண்டு : தேவன் நம்மிடமும் நமக்குள் பேசுவார் என்ற விசுவாசத்துடன் அவருடன் சத்தத்தை ஆத்துமாவில் கேட்க ஆர்வம் கொள்ள வேண்டும். மூன்று : தேவனைக் குறித்து நாம் சிந்திக்க வேண்டும். அதாவது தேவனைக் குறித்த நினைவுகளும் சிந்தனைகளும் நமக்குள் வரவேண்டும். யாரோடு பேசுகின்றோமோ யார் நம்மோடு பேசுகின்றார்களோ றாரைக் குறித்து நாம் அதிகமாக சிந்திக்கின்றோமோ அந்த நபரோடு தான் நம்முடைய உறவும் ஐக்கியமும் வலிமையாயிருக்கும்.

## தேவனிடன் பேசுதல் :

தேவனிடம் பேசுகின்ற அனுபவத்திற்கு ஜெபம் என்பது முக்கியமாக வழியாக உள்ளது. ஜெபம் என்பதை நம்முடைய தேவைகளை பட்டியலிடுகின்ற அனுபவமாக எண்ணாமல் ஆண்டவருடைய சமூகத்தில் நம்முடைய இருதயத்தைக் காண்பிக்கின்ற அனுபவமாகவும் அவரோடு மனம் விட்டு பேசுகின்ற அனுபவமாகவும் இருக்க வேண்டும். (சங்கீதம் 62:8) நாம் நம்முடைய மனதில் உள்ளவைகளை நண்பனிடம் பகிர்ந்து கொள்வதைப் போல் தேவனிடம் பகிர்ந்து கொள்ளப்பழக வேண்டும். அனுதினமும் நமக்குள்ளும் நம்மைச் சுற்றிலும் நடக்கின்றவைகளை ஆண்டவரிடம் சொல்லிப் பழக வேண்டும். என்ன நினைக்கின்றோமோ, எப்படி உணருகின்றோமோ, என்னென்ன சிந்தனைகள் நமக்குள் வந்து போகிறதோ எல்லாவற்றையும் தேவனிடம் ஒளிவு மறைவின்றி குழந்தையைப் போல ஒப்புவித்துப் பழக வேண்டும்.

## தேவ சத்தம் கேட்க வேண்டும்:

நாம் மட்டுமே தேவனிடத்தில் பேசுதல் அல்ல. அவர் நமக்குள் எதை அறியச் செய்ய விரும்புகின்றார்? நமக்குள் என்ன சொல்ல விரும்புகின்றார். நமக்குள் எப்படிப்பட்ட உணர்வுகளை ஏற்படுத்துகின்றார் என்பதையெல்லாம் கவனிக்க வேண்டும். நமக்குள் கர்த்தருடைய சத்தம் தொனிக்கத் தக்கதாக நம்முடைய இருதயத்தை தேவனை நோக்கி ஆயத்தமாக்கிக் காத்திருக்க வேண்டும். தேவனுடைய அமர்ந்த மெல்லிய சத்தம் நமக்குள் வரும்போது அதனை நாம் கேட்க வேண்டுமானால் ஆகாத உலக சத்தங்களை விட்டும் பலவிதமான பயனற்ற உலகத்தின் ஆரவார இரைச்சல்களை விட்டும் இருதயத்தின் காதுகளை திருப்பி தேவனை நோக்கி வைத்துக் கொள்ள கவனமாயிருக்க வேண்டும். இருதயத்திற்குள் தேவன் ஏதாவது ஒரு விதத்தில் தம்மை வெளிப்படுத்தி அவரிடத்திலிருந்து எதையாவது கேட்க செய்ய வேண்டுமே என்ற தாகத்தோடு தேடுவோர் தேவ சத்தத்தைக் கேட்பார்கள்.

## தேவனைக் குறித்து சிந்திக்க வேண்டும் :

யாரைக் குறித்து அதிகமாக சிந்திக்கின்றோமோ அவரோடு நமக்குள் ஐக்கியம் வலுவடையும். வேத வசனங்களைக் குறித்து சிந்திப்பது போல நம்மோடு ஐக்கியமாயிருக்க வந்த கர்த்தரைக் குறித்து நாம் சிந்திக்க வேண்டும். நமக்கு மிகவும் நெருக்கமானவராகவும், அன்பானவராகவும் எண்ணி அவரைக் குறித்து மனதில் அதிகமாக தியானிக்க வேண்டும். அவருடைய அன்பு அவருடைய பரிசுத்தம், அவருடைய மகிமை, அவருடைய செயல்பாடுகள், அவருடைய ஐக்கியம் என அவரைக் குறித்த வியங்களை மனதில் பல்வேறு கோணங்களில் நினைக்கவும் யோசிக்கவும் தியானிக்கவும் வேண்டும். (சங்கீதம் 63:6) அவரைக் குறித்த நினைவுகளின் வேளைகளில் அவருடைய தொடுதல்களையும் அரவணைப்புகளையும் அதிகமாக உணர்ந்து அவரோடுள்ள ஐக்கியத்தில் வளர முடியும்.



# BIRTHDAYS IN THE MONTH OF MARCH

| | |
|---|---|
| March 1 | Mr. P.Thangamani |
| March 2 | Mrs. S. Tabitha Salome |
| March 3 | Mrs.I. Vidhya Priyadharshini |
| | Mr.K.U.Benjamin |
| March 4 | Mr.P.G.Arun |
| | Miss P.Callin Bernice Accunta |
| | Mr. M. Mervin Gabriel |
| March 5 | Mrs. Stella.S |
| | Mr.I.Charles Samuel |
| March 7 | Ms..Juanita Paul |
| | Mrs.S.Joisy Vimala |
| March 10 | Mr.K.Arputha Raj |
| | Mr.A.Paul Pradeep |
| | Mr.J.Jimreeves S.Samuel |
| March 13 | Mrs. M.Ilakiya |
| | Mrs.Kalavathy |
| | Master. Felix Jacob Dawson |
| March 14 | Master. Chris Jeremiah |
| March 15 | A.Sherlyn |
| March 17 | I.Gethsiyal |
| March 18 | Master.B.Ryan David |
| March 19 | I.Divya |
| | Mrs.S.Shiny |
| | Mr.J.Praveen Isaac Samuel |
| March 21 | Miss K.Jessica Pearlyn |
| March 22 | Mrs.P.Angel |
| March 23 | Master.Benny Sam |
| March 25 | Mr.J.Samuel Joshua |
| March 25 | Mrs. P.Ponnuthai |
| March 25 | Miss. Tharani Grace Marianne |
| March 27 | Miss. Tharangini Mercy Joanne |
| | Mr.Joseph Samraj |
| | Mr.G.Vigil Singh |
| | Mr.K. Dharmaraj |
| | Mrs. Cynthia Dinesh |
| | Mr. Hongton Devaram |
| March 29 | Mr. Ilango Devaram |
| | Master A. Jason |
| March 30 | Mr.B.Caleb leo Christopher |
| March 31 | Miss S.Sunitha |

# WEDDING DAYS IN MARCH



March 05 Mr. R. Joseph & Mrs. Jeeva Joseph

**பிறந்த நாள் மற்றும் திருமண நாள் கொண்டாடும் அனைவருக்கும் திருச்சபையின் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்!**

# வேத வினா - விடை போட்டி

## மார்ச் மாத கேள்விகள்

**( வசன ஆதாரம் தரவும் )**

1. இயேசு சொன்ன எந்த வார்த்தைகளை (ஒரு சுவிசேஷத்திலும் பதிவுசெய்யப்படாத) பவுல் உபயோகித்தார்.
2. அகபு யார்? அவர் சொன்ன தீர்க்கதரிசனம் என்ன?
3. பிதாவையும் குமாரனையும் சேர்ந்தார் போல் உடையவன் யார்?
4. முலைக்கல்லின் மகத்துவம் என்ன?
5. அவருடைய வஸ்திரத்தின் மேலும் தொடையின் மேலும் எழுதப்பட்ட வார்த்தை என்ன?
6. பவுல் எதுவரை எபேசு பட்டணத்தில் இருக்க விரும்பினார்?
7. ஆபிரகாமுக்கு எது நீதியாக எண்ணப்பட்டது?
8. தொற்காள் எண்ணும் தபீத்தாள் யார்?
9. எழுந்திரு, நானும் ஒரு மனுவுன் தான் - யார் யாரிடம் சொன்னது?
10. 1 + 3 + 250 = 1

## விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 20-30-2017

<u>விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி</u>

**C.S.I. இயேசுவில் புதுவாழ்வு ஆலயம்**
எண் 55, 3வது மனை பிரிவு,
ஆசிரியர் குடியிருப்பு,
லட்சுமிபுரம், சென்னை – 600 099.

குறிப்பு: தெளிவான முகவரியுடன்
சந்தா எண்ணையும் சேர்த்து எழுதி அனுப்பவும்

csinewlifeinjesus@gmail.com 9444 633129

**www.csinewlifeinjesus.org**

## வருந்துகிறோம்!

நமது திருச்சபையின் சேர்ந்த திரு. **மோசஸ் விவேகானந்தன்** அவர்களின் துணைவியார் திருமதி. **சுகிர்தம் ரெபேக்கா ராணி** அவர்கள் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அன்னாரின் குடும்பத்திற்கு திருச்சபையின் சார்பாக ஆறுதல் தெரிவிக்கின்றோம்.



# <u>சென்ற மாத போட்டியின் விடைகள்</u>

| | | |
|---|---|---|
| 1. | அப்போஸ்தலர் | 27:14 |
| 2. | அப்போஸ்தலர் | 18: 24 - 26 |
| 3. | I இராஜக்கள் | 11:7 / அப் 7: 43 |
| 4. | அப்போஸ்தலர் | 4 : 36 - 37 |
| 5. | யாத்திராகமம் | 16: 18 |
| 6. | ஏரேமியா | 16:13 |
| 7. | கலா | 6 : 17 |
| 8. | ஆதியாகமம் | 18: 23 - 32 |
| 9. | லூக்கா | 16: 57 |
| 10. | அப்போஸ்தலர் | 20: 19 |

## சரியான விடை எழுதியவர்கள்

1. திருமதி. எஸ்தர் சந்தோஷ்ராஜ்
2. திருமதி. கலா சுந்தரகுமார்
3. திருமதி. ஜாய்ஸி விமலா
4. திருமதி. லீலா டிக்சன்
5. திருமதி. ஜூபிலி தர்மராஜ்
6. திருமதி. ஸ்விட்டிலீன் ரிச்சர்ட்
7. திருமதி. ரோஸ்லெட் செல்லன்
8. திருமதி. கீதா ஹென்றி
9. திருமதி. மெரில் ஜஸ்டின்
10. திருமதி. பொற்செல்வி

## படித்ததில் பிடித்தது

வாழ்க்கை என்பது ஒரு வழிப்பாதை
திரும்பிப் பார்க்கலாம் – ஆனால்
திரும்பிப்போக முடியாது...
அதனால் கடந்துச் செல்லும்
ஒவ்வொரு மணித்துளிகளிலும்
மகிழ்ச்சியை நிரப்பிக் கொண்டு
கடந்திடுங்கள்

**A.Joseph**

## வாழ்த்துகிறோம்!

நமது சபையை சேர்ந்த திருமதி ராஜி – எப்சிபா அவர்களின் மகள்?

**செல்வன். கவியரசு - செல்வி. கலையரசி**

இவர்களின் திருமணம் 13.02.2017 அன்று சிறப்பாக நடைபெற்றது.
திருச்சபையராக இவர்கள் குடும்ப வாழ்வு சிறப்பாக அமைய வாழ்த்துகிறோம்.

# விண்ணவர் சாயலை அணிவோம்

நாம் கிறிஸ்துவின் அடிச்சுவடிகளைத் தொடந்து வரும்படி
நமக்கு மாதிரியைப் பின் வைத்து போனார்
(I பேதுரு 2 : 21)

கிறிஸ்தவ வாழ்க்கையின் இலட்சியம் என்னவென்றால் நாம் கிறிஸ்துவைப் போல் மாற வேண்டும் என்பதுதான். என்னில் பிறர் இயேசுவைக் காண வேண்டும். நாம் ஒரு காரியத்தை செய்யும் போது அந்த இடம் ஆண்டவரை அறிந்த மக்கள் மத்தியிலும் சரி ஆண்டவரை அறியாத மக்கள் மத்தியில் ஆனாலும் சரி ( வீட்டிலோ சபையிலோ, வேலைஸ்தலித்திலோ, பொது இடங்களிலோ) இயேசு அப்பா இந்த இடத்தில் இருந்தால் இப்படி செய்வாரா இப்படி செய்வாரா? என்ற எண்ணம் நம்மில் உருவாகுமானால் அப்போது இருந்தே நாம் இயேசுவைப்போல மாற ஆரம்பித்து விட்டோம் என்று தான் அர்த்தம். ஆண்டவரிடம் இந்த கேள்வியை கேட்கும்போது ஆண்டவர் மெல்லிய சத்தத்தில் நம்மோடு பேசுவார். பரிசுத்த ஆவியானவர் சத்தமாக பேசமாட்டர். அந்த மெல்லிய சத்தத்திற்கு கீழ்படிய, கீழ்படிய ஆண்டவரின் சாயலில் நாம் மாறிக்கொண்டே வருவோம்.

வேதத்தை நாம் வாசிக்கும்போது இயேசுவின் அமோக பண்புகளை நாம் வெளிப்படையாக அறிந்து கொள்கிறோம். கிறிஸ்தவரின் அன்பு, இரக்கம், மனவுருக்கம், தீமை செய்கிறவர்களையும் நேசிக்கும் குணம், காட்டி கொடுக்கும் யூதசையும் சினேகிதனே என்று அழைக்கும் கலங்கமற்ற அன்பு, மண்ணிக்கும் சுபாவம் தனக்கு விரோதமாகப் பேசப்படும் காரியத்தைக் கேட்கும் வாய்திறவாத தன்மை, வையப்படும் போது பதில் வையாமல் இருப்பது, பாடுபடும் போது பயமுருத்தாமல் இருப்பது, இன்னும் அமோக குணங்களைச் சொல்லி கொண்டே போகலாம்.

இப்படி யோவான் 18ம் அதிகாரத்தில் மறைதுள்ள கிறிஸ்துவன் பண்பைப் பற்றி பார்க்கலாம். அது என்ன வென்றார் யாரையும் குறைகாணாத குணம். ஒருவர் செய்த தவரை சுட்டி காட்டி அவர்களை குறுகிபோக வைக்காத குணம் குற்றம் சொல்லாத குணமாகும்.

"நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று இயேசுவைக் குறித்து சரியாக கூறியவன், தண்ணீர் மீது நடந்த ஒரு சீடன், நான் ஒம்மோடு மரிக்க வேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதரிக்க மாட்டேன் என்று கூறியவனாகிய பேதுரு யோவான் 18ம் அதிகாரத்தில் 17ஆம் வசனத்தில் வாசல் காக்கிற வேலைகாரி பேதுருவை நோக்கி "நீயும் அந்த மனுஷனுடைய சிஷரில் ஒருவனல்லவா " என்றான்.



அதற்கு அவன் "நான் அல்ல" என்று மறுதலித்தான். வசனம் 25ல் குளிர்காய்ந்து கொண்டிருக்கிறவர்களில் சிலர் பேதுருவை நோக்கி நீயும் அவன்டைய சீஷரில் ஒருவனல்லவா என்றார்கள், அதற்கு அவன் நான் அல்ல என்று கூறி இரண்டாம் முறையாக மறுதலித்தான். 26ம் வசனத்தில் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரரில் பேதுரு காதர வெட்டினவனுக்கு இணத்தானனகிய ஒருவன் அவனை நோக்கி "நான் உன்னை அவனுடனே கூட தோட்டத்தில் காணவில்லையா" என்றான். உடனே பேதுரு மூன்றாம் முறை மறுத்தலித்தான். மாற்கு 14- 71ல் பார்த்தால் மறுத்தலித்தோடு சபிக்கவும், சத்தியம் பண்ணவும் தொடங்கிணான் என்று போடப்பட்டு இருக்கிறது. இப்படிப்பட்ட பேதுருவை உயிர்த்தெழுந்த இயேசு தன்னுடைய மூன்றாவது தரிசனத்தில் சந்திக்கிறார். பேதுருவைப் பார்த்து நீ என்னை மறுதலித்தாய் என்றோ, என்னை அறியேன் என்று சொல்லிவிட்டாய் என்றோ, சபித்து, சத்தியம் பண்ண தொடங்கி விட்டாயே என்ரோ கேட்கவே இல்லை. நம்முடைய வாழ்க்கையில் நமக்கு விரோதமாக ஒரு சொல்லிலோ, செயலிலோ, செய்தால் அவர்களை பார்க்கும் போது அவர்களிடம் எப்படியாவது "ஏன் அப்படி சொன்னீர்கள்? ஏன் அப்படிச் செய்தீர்கள்? என்று கேட்க துடிப்பவர்களாக இருப்போம் சிலர் நேரடியாகவே கேட்டு விடுவோம்.

ஆனால் இங்கு மூன்று முறை மறுதரித்த பேதுருவிடம் இயேவு மூன்று முறை " நீ என்னிடத்தில் அன்பாய் இருக்கிராயா?" என்று கேட்கிர ஒரு உன்னத பண்பை பார்க்கிறோம்.

இப்படி மற்றவர்கள் நமக்கு செய்யும் குறைகளைக்கானாத கண்களைத் தேவன் நமக்கு தர மன்ராடுவோம். ஒருவேளை இதுவரை நாம் எப்போதும், எதற்கு எடுத்தாலும், மற்றவர்களுடைய குறைகளையே பேசிக் கொண்டு இருப்பவர்களாக இருப்போமானால், குரைகாணாத இந்த பண்பை இயேசுவே எனக்குத் தாரும் என்று கேட்போம். தேவன் நிச்சயம் தருவார். நீங்கள் இயேசுவிலும் இயேசுவின் வார்த்தை உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவானாலும் அது உங்களுக்குச் செய்யப் படும். ஆமென்

விண்ணவர் சாயலை அணிந்து கொள்வோம்

திருமதி . சந்திரா வெஸ்லி

# கீதங்களை புரிந்து பாடலாமா?

<u>கிறிஸ்தவ கீதங்களின் வரலாறு</u>

## உருகாயோ நெஞ்சமே

**சலநாட்டை** **திரிபுடை தாளம்**

உருகாயோ நெஞ்சமே
குருசினில் அந்தோ பார்!
கரங் கால்கள் ஆணி யேறித்
திரு மேணி நையுதே!

மன்னுயிர்க்காய்த் தன்னுயிரை
மாய்க்க வந்த மன்னவர்தாம்,
இந்நிலமெல் லாம் புரக்க
ஈன குரு சேறினார்.

தாக மிஞ்சி நாவறண்டு
தங்க மேனி மங்குதே
ஏசுபரன் கண்ணயர்ந்து
எத்தனையாய் ஏங்குறார்.

மூவுலகைத் தாங்கும் தேவன்
மூன்றாணி தாங்கிடவோ?
சாவு வேளை வந்த போது
சிலுவையில் தொங்கினார்.

வல்ல பேயை வெல்ல வானம்
விட்டு வந்த தெய்வம் பாராய்
பூல்லர் இதோ நன்றி கெட்டுப்
புறம் பாக்கி னார் அன்றோ?

**ஆசிரியர் : சத்யாவாசகம் பண்டிதர்,** பாளையங்கோட்டை

ஆசிரியர் குறிப்பு : இவரைக்குறித்து “பண்டிதர்” என்ற ஒரு விளக்கம் மட்டும் டாக்டர் சவரிராயன் ஏசுதாசன் அவர்களால் கிடைத்தது. இப்பாடலின் இராகம் **ஆங்கிலப் பாடலின் திரிபு ஆகும்**. ஆனால் சத்யவாசகம் திஸ்ரதிரிபுடை தாளத்தில் பாடியிருக்கிறார். இவரின் பாடல்களில் இதோன்றே கிடைத்துள்ளது. சிலுவைக்காட்சியை உணர்வதற்கும் திருவிருந்து நேரத்தில் பாடுவதற்கும் ஏற்றதுதிப்பாடல்.

**கண்ணி 1:** சிலுவையில் கைகால்களில் ஆணியடிக்கப்பட்டு உடல் முழுவதும் நைந்த நிலையில் தொங்கிக் கொண்டிருக்கும் இயேசுவைப் பார்த்து உருக மாட்டாயோ நெஞ்சே?

**கண்ணி 2:** மனிதர்க்காய்த் தம்முயிரை கொடுக்கவந்த மன்னவர் இவ்வுலகத்தையே (புரக்க) பாவத்திலிருந்து காப்பதற்காக, அவமானமாகக் கருதப்படும் ( குருசேறினார்) சிலுவையில் தொங்குகிறார்.

**கண்ணி 3:** தாகமதிகரித்து நாவறண்டு உடலழகும் மங்குதே இயேசு ( கண்ணயர்ந்து ) மயக்கமுற்று (ஏங்குகிறார்) உலகை மீட்க வேண்டுமே என ஏங்குகிறார். தங்கம் போன்ற மேனி என உவமையணி அமைத்துள்ளார்.



**கண்ணி 4:** ( மூவுலகம்) மேலுலகு கீழுலகு, பாதாளம், ஆகிய மூன்றையும் வாழவைக்கும் தேவன் மூன்றே ஆணிகளில் தொங்குகிறாரே கால்களில் ஆணியடிப்பது யூதர் வழக்கமன்று உடல் பளுவை கால்களில்தான் தாங்கி நிற்க வேண்டும். சிலுவையிலும் முழுங்கால்கள் முடங்க வேண்டியதில்லை. ஐங்காயங்கள் என்பதற்கும் திருமறையில் ஆதாரமில்லை.

**கண்ணி 5:** (லவ்வி) வலிமைமிக்க (பேயை சாத்தானை வெல்ல வானம் விட்டு வந்த தெய்வத்தை சிலுவையில் ( பாராய் ) பார்ப்பாயாக நன்றியற்ற (புல்வர்) தீயவார் (புறம்பாக்கினார்)கிறிஸ்துவை ஊருக்கு வெளியே கொல்கதாமலையில் அறைந்தார்கள். பாடல் முழுவதும் எதுகைத்தொடை உள்ளது.

## இயேசு காவியம்

### <u>காய்க்காத அத்திமரம்</u>

செய்ய கால்கள் சிவப்புறும் நிலையிலே
ஐயன் மேனி அயர்வுற நடந்தனன்!
நெய்யி லாத விளக்கென வயிற்றிலே
வெய்ய தான பெரும்பசி வந்ததே!

பூவி லாத அத்திம ரத்தினை
மேவி அந்த மேலவன் நோக்கினான்
காயி லாத மலடென நின்றதே
தேவ மைந்தன் திருமனம் நொந்ததே!

படுவ தொன்று பட்டபின் னாலவர்
“படு”வெ னத்தன் சாபமு ரைத்தனர்
கொடிய பாவி சேர்த்த பொருளெனக்
கடிதில் அத்தி காய்ந்தழி பட்டதே!

ஆர்த்தெ முந்த சாபவி னைப்பயன்
பார்த்த சீடர் பரவசம் எய்தியே
வேர்த்த மேனி வியப்புடன் நோக்கினர்
ஈர்த்த மேனி வியப்புடன் நோக்கினர்
ஈர்த்த தந்த இயேசுவின் வார்த்தையே!

“உறுதி யாக நம்பிநீர் சொல்விரேல்
இறுதி யாக எதுவும் நடைபெறும்
அறுதியிட்டு அலையினை ‘விமு’ வென்றால்
குருதி சிந்திக் கடலினில் வீமுமே!

“போட்ட யாவும் முளைப்பது நிலத்திலே
கேட்ட யாவும் கிடைப்பது செபத்திலே
காட்டு கின்ற உறுதியே முக்கியம்
கூட்டு மந்த இறைவனின் முன்பிலே!” – கவியரசு கண்ணதாசன்

# தடைகளை தகர்க்கிறவரே தடையாய் இருக்கிறார்

நீங்கள் நன்றாய் ஓடினீர்களே, சத்தியத்திற்கு கீழ்ப்படி யாமற்போக உங்களுக்குதடைசெய்தவன்யார்?கலா:5:7.

நமது வாழ்க்கை ஆவிக்குரிய விதத்தில் வளர்ச்சியாய் ஓடிக் கொண்டிருக்கிறது. மாம்சிகமான கவலைகள் – உலககாரியங்கள், பலவீனங்கள் நம்மை தாக்கும் போது நாம் தேவ சத்தியத்திற்கு கீழ்ப்படிய சாத்தான்நமக்குதடைசெய்கிறான். ஆனால்தேவனேஎப்படிதடைசெய்ய முடியும்!

யோபு: 42 : 2 "தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது" - அப்படியானால் இந்த வார்த்தை மூலம் அவர் சகலத்தையும் செய்யவல்லவர் என அறிகிறோம். அப்படியானால் ஏன் தேவன் நம் ஜெபங்களுக்கும்/ உபவாசங்களுக்குரியபதிலை ஏன் தடை செய்கிறார்?

யோபு: 11: 10 "அவர் பிடித்தாலும்" அவர் அடைத்தாலும் அவர் நியத்தில் கொண்டு வந்து நிறுத்தினாலும் அவரை தடைபண் ணுகிற வன் யார்? அவரை தடைபண்ண யாருக்கும் அதிகாரம் இல்லை. அவர் சொல்ல ஆகும் அவர்கட்டளையிட நிற்கும். பெருங்காற்றும் கடலும் அவருக்கு அடகும் அப்படியானால் என்பிரச்சனைகள் / தோல்விகள் / ஏன் இன்னமும் அடங்கவில்லை? முடிவுவரவில்லை?

மிக: 2: 13 "தடைகளை நீக்கிப் போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்துபோகிறார்" அவர்கள்தடைகளைநீக்கி,வாசலால் உட்பிரவேசித்து கடந்துபோவார்கள்.

தடைகளை நீக்கி போடுகிறவரே தடையாக இருப்பாராக ஆம்! சில வேளைகளில் தேவ பிள்ளைகளாகிய நம்மை தேவன் தடுப்பார். ஏன்? அதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் எப்படி? தேவசித்தத்தை அறிந்து கொள்ள நாம் ஊன்றி ஜெபிக்க வேண்டும். எப்பொழுதெல்லாம் தேவன் நம்மை தடுப்பார்? ...

## நீ கனமடையாதபடிக்கு கர்த்தர் தடுத்தார்: எண் 24: 14

இஸ்ரவேல் ஜனங்களை ஆசிர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம். ஆனால் பாலாக் இஸ்ரவேலரை சபிக்க பிலேயாமை அழைத்தான் ஆனால் கர்த்தரோ பிலேயாம் கனமடையாதபடிக்கு பிலேயாமை கர்த்தர் தடுத்தார். நாம் நாமாக நமக்கு பிரியமான வழியில் கனமடைய கர்த்தர் விரும்ப மாட்டார். தேவனே கனத்திற்கு பாத்திரர் தேவ நாமத்தை எப்போதும் நாம் மகிமைப்படுத்துவதே தேவ சித்தம்.



தானாக கனமடைய வேண்டுமென்று அப்சலோம் எத்தனையோ வழிகளை தானே முயற்சித்தான் அத்தனையும் தோல்வியானது. தான் உயர வேண்டும் என்று நாம் எவ்வளவு முயற்சித்தாலும் நம்மை நம் தேவன் ஒருவரால் தான் உயர்த்த முடியும். ஆம்! எனவே நாம் கனமடையாதபடி எச்சரிப்புடன் வாழவேண்டும் நமது வெற்றிகளில், நன்மைகளில், ஆசீர்வாதங்களில் தேவன் ஒருவரையே நாம் கனப்படுத்த வேண்டும், தேவ நாமம் மகிமைப்படும்படியான காரியங்கள் மட்டுமே செய்ய பழகவேண்டும்.

## பாவம் செய்யாதபடி கர்த்தர் தடுத்தார். ஆதி 20: 6

" நீ எனக்கு விரோதமாக பாவம் பாவம் செய்யாத படிக்கு உன்னைத் தடுத்தேன் "

ஆபிரகாம் கேராரிலே வாசம் பண்ணும் போது அபிமெலேக்கு சாராளை ஆபிரகாமின் சகோதரி என ஆபிரகாம் கூறினதால் அவளோடு பாவம் செய்ய நினைத்தான், ஆனால் கார்த்தரோ அபிமெலேக்கைத்தடுத்தார்

நாமும் ஒவ்வொரு நாளும் ஆண்டவரின் பரிசுத்தத்தை தேவ பிரசன்னத்தைப் பெற்றுக் கொள்ளும்போது, சாத்தான் நம்மை அறியாமல் வைத்திருக்கும் பாவ வலையில் விழுந்து விடமாட்டோம், தேவன் நம்மை பாவம் செய்யதபடி தடுப்பார். ஆம் நாம் கொஞ்சபெலனிருந்தும் அவருடைய நாமத்தை மறுதலியாமல் அவருடைய வசனத்தை கைக் கொண்டபடியினாலே, இதோ திறந்த வாசலை (பரிசுத்தத்திற்கான) நமக்கு, கொடுப்பார், வெளி: 3: 8. ஒருவேளை நம்மை சாத்தான் பலவிதமான பாவ ஆசைகளால் கட்டியிருக்கலாம். ஆனால் தேவனோ நமக்கு உறுதி கொடுக்கிறார். நாகூம்: 1:13 இப்போதும் நான் உன்மேல் இருக்கிற அவன் நுகத்தை முறித்து உன்பாவ கட்டுகளை அறுப்பேன் அன்று கூறுகிறார்.

தேவன் நமக்கு வழிகாட்டி ஆலோசனை பொல்லும் போது அலட்சியப் போக்காய் இருந்துவிடக் கூடாது. உடனே உதறி எழுந்து விட்டு தேவ வழியை தெரிந்து அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும், தேவ எச்சரிப்பை பெற்றுகொள்ள தேவ வசனம் மூலம் பதிலை பெற்றுக்கொள்வோமாக ! தேவன் தாமே நம்மை ஆசிர்வதிப்பாராக! பெலப்படுத்துவாராக! ஆமென்!

இப்படிக்கு கிறிஸ்துவின் பணியில்

தொடரும்...

G.G.ஜெபராணி